III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.

O.S.29/2013

Deposition of witness for the Defendant / DW1
solemnly by Thiru.M.Muthupandi, Junior Assistant,
in accordance with the provision of Act I for 1873 on 29-04-2026

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | Kaja Najirudin. S | Village | : |
| Father's / Husband's Name | : | Sikkandar | Calling | : |
| Age | : | | Taluk | : |

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது ICICI வங்கி, அம்பத்தூர் இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் கிளையில் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகின்றேன். இந்த வழக்கில் இன்று சாட்சியம் அளிக்க இந்நீதிமன்றத்திலிருந்து கிடைக்க பெற்ற அழைப்பாணையின் பெயரில் சாட்சியம் அளிக்க முன்னிலையாகி இருக்கின்றேன். இந்நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையில் எங்கள் வங்கியில் முன்னால் பராமரிக்கப்பட்டு வந்த வங்கி கணக்கு எண்கள். 1)060705001017, Intrasyss 2)060701510270, S.Dorairaj. ஆகியவை பற்றிய வங்கி கணக்கு நகலை கொண்டு வந்திருக்கின்றேன். எனக்கு கிடைக்கப்பெற்ற அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற 8 பரிவர்த்தணைகள் பற்றிய விவரங்களை தேடிப் பார்த்ததில் 5 பரிவர்த்தணைகள் மட்டும் கிடைக்கப்பெற்றது. மீதமுள்ள 3 பரிவர்த்தணைகளை எங்கள் மத்திய அலுவலகத்தில் கேட்டிருக்கின்றோம். அது கிடைத்தவுடன் அதனை தாக்கல் செய்கின்றேன். Intrasyss வங்கி கணக்கின் 01.03.2011 முதல் 30.06.2011 வரையிலான வங்கி கணக்கு விவரத்தை தாக்கல் செய்கின்றேன். அது **பி.த.சா.ஆ.1.** S.Dorairaj. அவர்களுடைய வங்கி கணக்கின் 01.03.2011 முதல் 16.05.2011 வரையிலான வங்கி கணக்கு விவரத்தை தாக்கல் செய்கின்றேன். அது **பி.த.சா.ஆ.2.** எனக்கு கிடைத்த அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற வரிசை எண்.6 லிருந்து 8 வரையிலான பரிவர்த்தணைகளான 17.05.2011 தேதியிலான ரூ.1,44,000/-க்கான காசோலை மூலமான பரிவர்த்தணை.

15.06.2011 தேதியிலான ரூ.2,07,250/-க்கான காசோலை மூலமான பரிவர்த்தணை. 11.10.2012 தேதியிலான ரூ.4,75,900/-க்கான காசோலை மூலமான பரிவர்த்தணை. இந்த 3 பரிவர்த்தணைகள் பற்றிய முழுவிவரமும் எனக்கு ஐதராபாத்திலுள்ள எங்களது வங்கி மத்திய அலுவலகத்திலிருந்து கிடைக்கப் பெற்றவுடன் தான் இது பற்றி கூற முடியும். எனக்கு கிடைத்த அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற முதலாவது பரிவர்த்தணையான ரூ.2,36,000/-க்கான 25.04.2011 தேதியிட்ட காசோலை மூலமான பரிவர்த்தணை இரண்டு வங்கி கணக்கிலும் காணப்படவில்லை. இரண்டாவது பரிவர்த்தணையான 25.04.2011 தேதியிட்ட ரூ.27,00,000/-க்கான வரைவோலை மூலமான பரிவர்த்தணை இரண்டு வங்கி கணக்கிலும் காணப்படவில்லை. மூன்றாவது பரிவர்த்தணையான 11.05.2011 தேதியிட்ட ரூ.52,00,000/-க்கான வரைவோலை எஸ்.துரைராஜ் அவர்களுடைய வங்கி கணக்கில் எடுக்கப்பட்டிருக்கின்றது. நான்காவது பரிவர்த்தணையான 11.05.2011 தேதியிட்ட ரூ.5,76,000/-க்கான காசோலை பற்றிய விவரங்கள் எதுவும் இரண்டு வங்கி கணக்கிலும் இல்லை. ஐந்தாவது பரிவர்த்தணையான 13.05.2011 தேதியிட்ட ரூ.11,50,000/-க்கான காசோலை திரு.துரைராஜ் அவர்களுடைய வங்கி கணக்கில் இருந்து வி.ஜான்வெஸ்லி என்பவரது வங்கி கணக்கிற்கு மாறுதல் செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது நான் கொண்டுவந்திருக்கின்ற பி.த.சா.ஆ.1, 2 ஆவணங்களில் 5 வது பரிவர்த்தணையில் சொல்லப்பட்டுள்ள ஜான்வெஸ்லியின் வங்கி கணக்கு விவரம் இல்லை. தற்பொழுது இந்த வங்கி கணக்குகளும் எங்களது வங்கியில் நடப்பில் இல்லை.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எங்களது வங்கியில் பராமரித்து வந்த கணக்கு விவரங்களின் விவரங்களை நான் தாக்கல் செய்திருக்கின்றேன். 5 வது பரிவர்த்தணையில் சொல்லப்பட்டுள்ள ஜான்வெஸ்லியின் வங்கி கணக்கு விவரம் அதில் இல்லை. மூன்றாவது பரிவர்த்தணையான 11.05.2011 தேதியிட்ட ரூ.52,00,000/-க்கான வரைவோலை துரைராஜ் என்பவரது வங்கி கணக்கில் இருந்து எடுக்கப்பட்டதற்கான விவரம் தான் அது. அது யாருக்கு கொடுக்கப்பட்டது என்ற விவரம் நான் கொண்டுவந்திருக்கின்ற இரண்டு வங்கி கணக்கிலும் தெரியவராது. ரூ.52,00,000/-க்கான வரைவோலை

ஜான்வெஸ்லி பெயரில் மாற்றத்தக்கதாக உள்ளது. இந்த ஜான்வெஸ்லியின் தகப்பனார் பெயர் வேதநாயகம் என்று இந்த பரிவர்த்தனையில் குறிப்பிடப்படவில்லை.

(சாட்சியானவர் மத்திய அலுவலகத்தில் இருந்து ஆவணங்கள் கிடைக்கப்பெற்றவுடன் தான் மற்ற கேள்விக்கு பதில் அளிக்க முடியும் என்று கூறியதால் சாட்சி விசாரணை ஒத்தி வைக்கப்படுகின்றது.)